**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.324 /2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | செந்தில்குமார் |
| Father's /Husband Name | : | கண்ணன் |
| Village | : | மருத்துவக்குடி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 43 |
| Occupation | : | கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 03rd day of March 2026.
Accused absent. Petition under section 355 BNSS filed allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா மருத்துவக்குடி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி தியாகராஜனை எனக்கு தெரியும். அவர் எனது எதிர் வீட்டில் தான் வசித்து வருகிறார். எதிரிக்கும் எனக்கும் இடையே எனது மற்றும் அவரது ஆடுகள் நடுரோட்டில் நின்றால் எங்களுக்கிடையில் அடிக்கடி பிரச்சனை ஏற்படும். கடந்த 06.11.2024 ம் தேதி மாலை 04.30 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள அரசலாற்றங்கரையில் என்னுடைய இயற்கை உபாதை காரணமாக சென்ற போது எதிரி தியாகராஜன் என்னை எங்களுக்கிருந்த சண்டை காரணமாக என்னை தகாத வார்த்தையால் தேவிடியா மகனே குச்சிகாரி மகனே என்று திட்டினார். பின்பு அவர் அவரது காலவாயில் வைத்திருந்த கட்டையால் என்னை தலை, முதுகு, முகம் மற்றும் கை, கால்களில் அடித்தார். அவர் என்னை கட்டையால் எனது வலது பக்க வாயில் அடித்ததால் எனது பல் உடைந்துவிட்டது. அவர் அடித்ததன் காரணமாக நான் மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டேன். பின்பு மயக்கம் அடைந்து கீழே கிடந்த என்னை எனது தம்பி விஜய் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு சிகிச்சை பெற்றுக்கொண்டு

மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். பின்பு அங்கிருந்து எனது ஏற்பட்ட காயத்தால் நான் மேற்படி மருத்துவமனையிலிருந்து மயிலாடுதுறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். பின்பு இது சம்மந்தமாக எதிரி தியாகராஜன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நான் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் கடந்த 08.11.2024 ம் தேதி புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**- எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.03 14:03:20 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.